**செய்தி வெளியீடு எண்.002** **நாள். 3.1.2008**

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று தேசிய ஊரக வளர்ச்சி வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

2006 ஆம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தேர்தல் அறிக்கையில் கூறியபடி, விவசாயிகளின் துயர் துடைக்க கூட்டுறவு வங்கிகளில் 31.3.2006 அன்று நிலுவையிலிருந்த ஏறத்தாழ 7000 கோடி ரூபாய் விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை மேலும் செம்மைப்படுத்தி விவசாயிகளின் வாழ்வுக்கு வளம் சேர்க்கவும் மைய அரசால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளைத் தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது. இதன் அடிப்படையில் குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக ஒரு சிறப்பு நிதியுதவித் திட்டத்தை மைய, மாநில அரசுகள் செயல்படுத்தவுள்ளன.

பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழக அரசு, தேசிய ஊரக வளர்ச்சி வங்கியுடன் இன்று (3.1.2008) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. தமிழக அரசின் சார்பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களும், தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் சார்பாக அதன் தலைவர் திரு. யு.சி. சாரங்கி, இ.ஆ.ப., அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 31.3.2004 அன்றைய நிலவரப்படி கூட்டுறவு கடன் அமைப்பின்கீழ் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளில் பொது நியதிகள் அடிப்படையில் சிறப்புத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் குவிந்த நட்டம் கணக்கிடப்பட்டு, அந்த நட்டம் மைய மற்றும் மாநில அரசுகளால் ஈடுசெய்யப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் குறுகிய காலக் கூட்டுறவு கடன் அமைப்புகளுக்கு மைய அரசிடமிருந்து ஏறத்தாழ 925 கோடி ரூபாயும், மாநில அரசிடமிருந்து 143 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 1068 கோடி ரூபாய் நிதியுதவி கிடைக்கும்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதால் கூட்டுறவு கடன் அமைப்புகளின் நிதிநிலை மேலும் சீரடைந்து, அவை வலுவான அமைப்புகளாகத் தொடர்ந்து செயல்படும். இத்திட்டத்தால் பயன்பெறும் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடந்த கால நட்டம் ஈடு செய்யப்படுவதுடன், வங்கியின் பணியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படும்; வங்கிகளின் நடவடிக்கைகளும் படிப்படியாகக் கணினிமயமாக்கப்படும். இதனால் இந்த அரசின் முக்கிய நோக்கமான கூட்டுறவு அமைப்புகள் மேலும் சீரமைக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வில் வளம் கொழிக்க வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மும்பை நபார்டு தலைமையக பொது மேலாளர்கள் திரு. பக்ஷி, திரு. ஆர். என். குல்கர்னி, தமிழ்நாடு கூட்டுறவு

**சங்கங்களின் பதிவாளர் திரு. யதீந்திரநாத் ஸ்வைன், சென்னை மாவட்ட முதன்மை பொது மேலாளர், திரு. ராகவலு ஆகியோர் உடனிருந்தனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.